நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# தமிழ் 3



திரைகடலோடினும் தீந்தமிழ் பேணுதும்

பாடம் 15 – திருக்குறள்

தமிழிலுள்ள அரிய நூல்களுள் திருக்குறள் ஒன்றாகும். அதை எழுதியவர் திருவள்ளுவர். அவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ்ப் புலவர்.



திருக்குறள் இரண்டு அடிகள் கொண்ட பாக்களால் அமைந்தது. திருக்குறளில் ஆயிரத்து முன்னூற்று முப்பது பாக்கள் உள்ளன. இவை அறம், பொருள், இன்பம் என மூன்றாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அதனால் திருக்குறள் "முப்பாநூல்" எனவும் அழைக்கப்படுகிறது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

இது முதலாவது திருக்குறள். இக்குறள் கடவுள் வாழ்த்தாக அமைகிறது. எழுத்துகள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன. அதுபோல, உலகம் கடவுளை முதலாக உடையது என்பது இதன் பொருள்.

## பாடம் 17 – பாரதியார்



பாரதியார் இருபதாம் நூற்றாண்டிலே, தமிழ் நாட்டில் வாழ்ந்த புலவர்.

பாரதியார் 1882 ம் ஆண்டு டிசம்பர் மாதம் பதினொராம் தேதி எட்டய புரத்திலே பிறந்தார். அவரின் இயற்பெயர் சுப்பிரமணியன். அவர் பதினொரு வயதிலேயே புலமை மிக்கவராக விளங்கினார். அதனால், "பாரதி" என்று பட்டம் சூட்டப்பட்டார்.பாரதியார் தேசப்பற்று நிறைந்தவர். இந்திய நாட்டின் விடுதலைக்காக உழைத்தவர். அன்றைய சமுதாயத்திலே காணப்பட்ட குறைகளைச் சுட்டிக்காட்டிய சீர்திருத்தவாதி. பெண்கள் முன்னேற்றத்திற்காகக் குரல் எழுப்பியவர்.

'நமக்குத் தொழில் கவிதை
நாட்டுக்கு உழைத்தல்
இமைப்பொழுதும் சோராது இருத்தல்' என்பது பாரதியின் இலட்சியம்.